உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. ௧. } சௌமிய ௵ வைகாசி ௴ { பகுதி ௨

## புலவர் கூட்டம்.

கல்விக்கிருவர் என்பது நம் நாட்டுத் தமிழ்ப்பழமொழி. இருவர் என்பதற்குப் பலர் என்பதே இவண் பொருளாகக்கொள்ளவேண்டும். குற்றமற்ற தொன்னூலாராய்ச்சியிற்சிறந்துள்ளவராய் பகையற்றவராய் மனத்திட்ப முடையராயுள்ள புலவர் பெருமக்கள் பல்லோர்கூடித் தாம் தாம் கண்ட அரிய பெரிய விஷயங்களைக் கூறி பிறர்மகிழ்ச்சியைக்கண்டு தம்மகிழ்ச்சி முன்னினும் மிகக்கொண்டு வாழ்வதைப்போல இன்பந்தரும் வாழ்வு யாண்டும் இல்லையன்றே! இதனை

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி."

தாம்இன்புறுவது உலகுஇன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்" என்பவற்றாலறிக.

பொன்னாட்டிற்புக்கு அமிழ்தமுண்டு அனுபவிக்கு மின்பமுங்கற்றார் கூடியிருந்து அனுபவிக்கும் இன்பத்திற்கு இணையாகாதென்றார். காண்பாம் என்றதில் ஒரு வியப்புளது. என்னை? அச்சுவர்க்கவின்பம்

சிறந்து றினும் அதனைக்காண்டலேயன்றி யவண் இருந்து நுகருங் கருத்தின்மையை விளக்கி நிற்றலேயாம். இதனாலன்றே “ செவிக் குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும் ” என்றார்.

இத்தகைய சிறந்த இன்பம் மேமீ 22௳ முதல் 27௳ வரை இம்மதுரை மாநகரின்கண்ணே பலரும் அனுபவிக்கச் சுலபமாகக் கிடைத்தது.

மேமீ 22௳ யன்று மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தின் 8-வது வருஷோத்ஸவம் கொண்டாடப்பட்டது. அற்றைநாள் மாலை 5-மணிக்கு அமெரிக்கன் ஐஸ்கூலில் சபை கூடியது. டிப்டிக்கலெக்டர் ப்ரும்மஸ்ரீ ராஜகோபாலாசாரியார் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கச் சங்கக்காரியதரிசியால் கடவுள் வாழ்த்துடன் அறிக்கைப்பத்திரம் வாசிக்கலாயிற்று. பின்னர் நரைக்குமருந்து, இரட்டையர் சரிதம், என்னும் இரண்டு விபாசங்கள் படிக்கப்பட்டதுடன் மகாலோபிநாடகம் குமணசரித்திரநாடகம் என்னும் இரண்டு நாடகங்கள் அவற்றிற்குரிய அங்கங்களுடன் வியப்புறத் தக்கவிதத்தில் ஷை சங்கஅங்கத்தினரால்நடிக்கப்பட்டன. அக்கிராசனாதிபதியவர்கள்சங்கத்தை மிகச்சிறப்பித்து உபந்யசித்தார்கள். பின்னும் பலவற்றாலும் மிக்ககோலாகலமாக இச்சபை நிறைவேறியது.

24௳ மாலை 4-மணிக்கு சேதுபதி ஐஸ்கூலில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 8-வது வருஷோத்ஸவக் கூட்டம் கூடியது. வந்தவர்க்கெல்லாம் வழக்கப்படி சிற்றுண்டி கொடுக்கப்பட்டது. சங்கத்தின் அங்கத்தினரில் திருநெல்வேலி ஸ்ரீமாந் பால்வண்ணமுதலியாரவர்கள், மகிபாலன்பட்டி ஸ்ரீமாந் மு. கதிரேசச்செட்டியாரவர்கள், சோத்குடி ஸ்ரீமாந் எம். கே. எம். அப்துல்சர்திறு ராவுத்தரவர்கள், சோழவந்தான் ஸ்ரீமாந் அ. சண்முகம் பிள்ளையவர்கள், திருச்சி ஸ்ரீமாந் சவரிராயபிள்ளையவர்கள், சாலியமங்கலம் ஸ்ரீமாந் சாம்பசிவநாயனாரவர்கள், குடந்தை ஸ்ரீமாந் பின்னத்தூர் நாராயணசாமியய்யரவர்கள், கோயமுத்தூர் ஸ்ரீமாந் இராமலிங்கச் செட்டியாரவர்கள் முதலிய அநேகரும் மதுரைவாசிகளுமாகச் சுமார் 300பேர்வரை கூடினார்கள்.

அச்சபைக்கு மதுரையில் பிரபல வக்கீலும் தமிழ்ச்சங்கத்தின் உபாக்கிராசனாதிபதியும் வடமொழி தென்மொழி முதலிய பலபா

ஷையிற் றேர்ச்சியுடையருமாகிய ப்ரும்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள் அக்கிராஸனாதிபதியாக இருக்கும்படி ஸ்ரீமாந் பாண்டித்துரைஸாமியவர்கள் பிரேரேபிக்க சபையார் கரகோஷஞ்செய்ய ஐயரவர்கள் ஆசனத்தேறி இனிய முன்னுரை கூறியிருந்தார்கள்.

அறிக்கைப்பத்திரம் படிக்கப்பட்டது. சங்கத்தின் ஆக்கங்கருதி சிலர் நல்லபிப்பிராயம் வெளியிட்டனர். பின்னர் சபாநாயகரவர்கள் சங்கப்பெருமையைப்பற்றி நன்குபேசினார்கள். நெடுவை வித்வான் இராமசாமியய்யங்காரவர்கள் தாமியற்றிய இனியவாழ்த்துக்கவிகளை இன்னிசையுடன் கேட்டார் மனமுருகப்படித்தார்கள். அதன்பின் சங்கஸ்தாபகரும் நிரந்தர அக்கிராசனாதிபதியும் ஆகிய ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைஸாமியவர்கள் எழுந்து சபையார்க்கும் அப்போதமர்ந்த சபாநாயகரவர்கட்கும் வந்தனமளிக்கத்தொடங்கி அமிர்த வருஷம் பொழிந்தாற்போல இனிமையாகப் பலவிஷயங்களைக்கூறிச் சபாநாயகர்க்குப் பூமாலை சாத்தினார்கள். சாலிபமங்கலம் ஸ்ரீமாந் மு. சாம்பசிவநாயனார் அவர்கள் வழக்கப்படிகொண்டுவந்த வில்லைமாலையை நல்லுரைகளுடன் சபாநாயகர் அவர்கள் ஸ்ரீமாந் பாண்டித்துரைஸாமியவர்கட்குச் சாத்தினார்கள். போனகிராப்வாத்திய சங்கீதத்துடன் 8-மணிக்கு சபை கலைந்தது.

மறுதினம் காலை $7\frac{1}{2}$-மணிக்கு ஷை சங்கப்புலவர் கூட்டங் கூடியது. ஸ்ரீ பால்வண்ணமுதலியாரவர்கள் சொற்பொழிவாற்றுப் படை என்னும் பிரசங்க இலக்கண நூல் ஒன்று எழுதி வாசித்தார்கள். ஸ்ரீமாந் எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தரவர்கள் ஈகைமாட்சியைப்பற்றி உயர்ந்த பற்பல பிரமாணங்களுடன் ஓர் வியாசம் எழுதிப் படித்தார்கள். சபையிலுள்ள வித்வான்களிற் சிலர் பாயிரக்கவிகள் கூறினார்கள்.

மாலையிலும் அவ்வாறே சபைகூடியது சங்கீதவிஷயமாக ஸ்ரீமத் பி. எஸ். சுப்பிரமணியய்யரவர்கள் அரியதொரு வியாசம்படித்து மிக மகிழ்வித்தார்கள்.

மூன்றாநாட்காலையிலும் சபை கூடியது. பின்னத்தூர் ஸ்ரீமத் நாராயணசாமியய்யரவர்கள் தாமியற்றிய பழஞ்சோற்றுத்தூதுநூலை

வாசித்தார்கள். மற்றும் பற்பல வியாசங்களும் வாசிக்கப்பட்டன. இவ்வாறு மதுரைத்தமிழ்ச்சங்க வருஷோத்ஸவம் மிக்கவிமரிசையாக நடைபெற்றது.

27உகாலை 8-மணிக்கு மாணவர்செந்தமிழ்ச்சங்கத்தாரால் கூட்டிய இவ்வித்வக்கூட்டம் அன்னக்குழிமண்டபத்தில் கூடியது. அப்போது ஸ்ரீமாந். பூரணலிங்கம்பிள்ளை அவர்கள் பி. ஏ. அக்கிராசனத்தின் கீழ் பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகையம்மையின் வியாசமும், நாகை நீலலோசனிப் பத்திராசிரியர் ஸ்ரீமாந் ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் எழுதிய கல்வி என்ற வியாசமும் வாசிக்கப்பட்டதுடன் ஸ்ரீமாந் ம. கோபாலகிருஷ்ணையரவர்களியற்றிய ஆங்கிலக் கருத்துக்கமை தமிழ்ப்பாடல்கள் பல அரங்கேற்றப்பட்டன. சபையார் வியந்து கூறினார்கள். பின்னர் ஸ்ரீமாந். பால்வண்ண முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் பின்னத்தூர்ப் பழஞ்சோற்றுத் தூதாசிரியர் ஸ்ரீமத். நாராயணசாமியய்யரவர்கள் வேங்கடத்தைப்பற்றிய தொரு வியாசமெழுதிப்படித்தார்கள். இவ்வியாசத்தையும் இதைப்பற்றிய பிறநிகழ்ச்சிகளையும் அடுத்தபாநுவில் எழுதுவோம்.

அன்று மாலை 5-மணிக்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுரர் திருக்கல்யாண மண்டபத்தில் ஸ்ரீமாந். பாண்டித்துரைஸாமியவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமாந் பால்வண்ணமுதலியாரவர்கள் பிரணவம் என்னும் தலைப்பெயரால் ஒரு சிறந்த பிரசங்கமாரிபொழிந்தார்கள். அவ்விஷயத்தைப்பற்றி சபாநாயகரவர்கள் மிகவும் நன்கு பேசினார்கள். ச்சபையார் யாவரும் மிகமகிழ்ந்து கொண்டாடி நன்றிகூறியபின்பு சபைகலைந்தது.

இவ்வாறாக புலவர்கூட்டத்தால் இம்மதுரை வாசிகளும் பிறரும் மனமகிழ்ச்சி பெரிதும் பெற்றார்கள். இத்தகைய இன்பம் மேன்மேலும் தழைத்தோங்குமாறு திருவாலவாயுடையார் திருவருள் புரிக.

பத்திராதிபர்.

# * நரைக்கு மருந்து.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

நமது வியாசம் "நரைக்கு மருந்து" என்னும் தலைப்பையுடையது. முப்பது வயதுக்கு முன்னரே தாடி நரைத்து, தலை நரைத்து, கைத்தண்டேன்றி, கண்டார் நகைக்கத்திண்டாடுகிற, பாலவிருத்தரையும், பேரனுக்குப் பேரன் பிறந்தபின்னும் கருமயிரில் ஒரு மயிரேனும் நரைமயிராகாமல், கைத்தண்டோச்சி, சல்லிக்கட்டு மாட்டைத்துரத்தியோடுகிற விருத்தகுமாரரையும் பார்த்திருக்கிறோம். ஆதலால் முந்தியவர் நரைதரு மருந்தையும், பிந்தியவர் நரைதெறு மருந்தையும் தின்றேயிருக்கவேண்டும். அப்படி ஒரு மருந்துண்டா என்று கேள்வி வரும். சிலநாளைக்குமுன் வடநாட்டு வயித்தியர் சிலர் தஞ்சைக்கு வந்து நரைமாற்ற மருந்து தருகிறோம் என்று தெருத்தெருவாய்ச்சுற்றினார்கள். மருந்துக்குக்கிரயம் வாங்குகிறதில்லை. ஆறு மாதங்கழித்தவுடன் நூறு ரூபாய் கொடுப்பதாக, முத்திரைத்தாளில் பத்திரம் எழுதித்தந்தால், போதும் என்றார்கள். ஆறுமாதக்கெடுவை எட்டுமாதமாக வைத்துக்கொள்ளுங்கள் என்றால், கூடாது கூடாது அது கஷ்டம் என்றார்கள். ஆறுமாதத்துக்கு எட்டுமாதம் ஆயிரம் வருஷம் கூடிப்போச்சா, ஏன் இணங்கமாட்டோம் என்கிறார்கள் என்று யோசிக்க, அவர் மருந்து பூச்சு மருந்தாயிருக்கவேண்டும். அம்மருந்தின் கரு நிறம் ஆறுமாசந்தான் நிற்கும். அதன்மேல் மயிர் முன்னிறம் கொள்ளும் என்று யூகிக்கலாயிற்று. அவர் மருந்து என்றைக்கும் நிறங்கொடுத்து நிற்பதாகவே வைத்துக்கொள்வோம். அது நரை வந்தபின் மாற்றுகிற மருந்தாயிருக்குமேயொழிய வாராமற்றடுக்குமருந்தாயிராது. வந்தபின் மாற்றுவதினும் வாராமற்றடுப்பதே நலம். "Prevention is better than came" என ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. சில வருஷங்களுக்குமுன், ஆங்கிலேய மகாஜன சபை மெம்பர் ஒருவர் தஞ்சையில் பிரசங்கித்தார். அப்போது இந்தப்பழமொழியைச்சொல்லி, முந்தியபாகத்தின்படி நடப்பவர்கள் இந்துக்கள் பிந்தியபாகத்தின்படி நடப்பவர் தங்களவர் என்றும் விதந்து கூறினார். இவர் கூற்றின் பலத்தைப் பற்றக்

---

* இவ்வியாசம் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து எட்டாவது வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

கோடாகக்கொண்டு நம்மவர் கட்டிவைத்திருக்கும் வாகடம் முதலிய சாத்திரச்சுவடிகளைப்புரட்டினேன். நான் புரட்டின புரட்டு வீண் புரட்டாய் முடியாமல், காரியஞ்சொற்பங்கைகூடியது தன்னவிடங்கொடுத்தது. "மருந்து" நேரில் கிடைக்கவில்லையாயினும், மருந்து முறை எழுதியிருந்த சீட்டு ஒன்று அகப்பட்டது. அது ஒரு நரைமூதாட்டியால் எழுதப்பட்டது. "பால சோதிடம் விருத்தவைத்தியம்" என்று உலகர் கூறுவார்கள். நமது மருந்து முறை எழுதியவர் ஒரு விருத்தையாதலால், அது சரியான முறையென்றே கொள்ளலாயிற்று. "மருந்து முறைச்சீட்டு" என்பதன் பொருள் சிலருக்கு விளங்காதிருக்கும். ஆங்கில வைத்தியசாலைகளில் நாம் ஏதாவது தேகத்திலுள்ள கெடுதிகளைச் சொல்லிக்கொண்டால், அது இன்ன வியாதி அதற்கு இன்னின்ன மருந்தை இன்ன இன்ன அளவில் கலந்துகொடு என்று டாக்டர்கள் எழுதிக்கொடுப்பார்கள். அந்தச்சீட்டுத்தான் மருந்துமுறைச்சீட்டு. அதை "Prescription" என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். ஆம் இந்த மருந்துமுறைச்சீட்டு எல்லாம் நேற்று வந்ததுதானே. பண்டைக்காலத்திலே எழுதியிருந்தது என்றால் எப்படி நம்புவது என்பீர்கள் அப்படி எண்ணவேண்டாம். பண்டைநாளிலேயே உண்டாயிருந்த பழக்கமே யின்னும் வழங்கிவருகிறது என்று நான் சொன்னால் ஒருவேளை சந்தேகிக்கக்கூடும். நமது தமிழ்வேதமாகிய திருக்குறளில் இருந்து எடுத்துக்காட்டினால் நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமல்லவா ?

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து"

என்னுங்குறளை நீங்கள் அறிவீர்கள். இதில்

"உற்றவன் என்பது வியாதியஸ்தன் Patient"
"தீர்ப்பான் வயித்தியன் Doctor
"மருந்து Medicine
"உழைச்செல்வான்" வியாதியஸ்தனுக்கும், வயித்தியனுக்கும் மத்தியில் நின்று உதவுவோன் Compounder"

இதனால் இப்படி வழங்கும் வழக்கம் ஏற்கனவே யிருந்ததேயன்றிப் புதிதல்லவென்பது எளிதில் விளங்கும். இவ்வாசிரியர் சிறந்த ஆசிரியர் என்பது உங்கள் மனத்தில்படும். இவரோடுடன்பிறந்தவர் நமது நரைமூதாட்டி என்று நீங்கள் அறிந்தவுடன் அவர் எழுதிய பக்குவத்தில் தக்க நம்பிக்கையுண்டாகும். மருந்தினிடத்தும் மருந்து கொடுப்பவரிடத்தும் சரியான நம்பிக்கை வியாதிக்காரனுக்கு உண்டாகுமாயின் இதுவே பெரிய மருந்து. வேறுமருந்து வேண்டாமென்பது மருத்து நூலார்கருத்து. இங்ஙனம் மருந்து

திருந்தக்கையாடுமுறையில் இடைக்கிடை சிறுகுறை நேரிலும் குறைவில்லையாதலின் என்க.

உலகத்தில், வியாதியஸ்தர் வயித்தியரைத் தேடிப்போய் அவரிடத்தில் வியாதிக்கூறெல்லாம் விளங்கும்படி சொல்லிவயித்தியருக்கும், மருந்துக்கும், வேண்டிய அளவு செலவுக்கும்கொடுத்து வைத்தியன் சமையம்பார்த்து மருந்தைவாங்கிவிசுவாசத்துடன் உட்கொண்டாலன்றி வியாதிதீராதென்பதும் மருத்துநூல்முறை. இங்ஙனமாகநரையென்னும்வியாதிக்கு வியாதிக்காரன் வாய்திறக்கக்கூடாதாம்,மருத்துவர் தாமேஉதவவேண்டுமாம்ரோமாபுரி சிசரோஎன்றறிபுணர் 'Enkindness proceeds always from the Recepients of favor" என்றுவற்புறுத்தியெழுதியிருக்கிறார். அவர்சொல்லியதற்கு "அன்பான காரியங்களைச்செய்யப்பெற்றவன் எவனோ, அவனிடமிருந்தே அன்பீனமானகாரியம் வெளிவரும்" என்று பொருள். இவர்பேச்சை எவராலும் மறுக்க இயலாது. "பேச்சுக்குச்சிசரோ" என்றுசொல்லும் தகுதியை உடையவர் அவர்மக்கள்இடத்தில் ஏதோமனஸ்தாபத்தின்பேரில்இப்படிச்சொல்லியிருக்கவும்கூடும். இதை வேதவாக்காகக்கொள்ளவேண்டுமா என்று சொல்லலாம். உலக இயல்பையும் ஒப்புநோக்கில் அப்படியேகாணுவோம்.

மட்டற்ற அன்போடு மகனைத்தாய் வளர்க்கிறாள், நாட்டுப்பெண் வந்தவுடன் மாற்றுப்பெண்ணாகிறாள், செய்த நன்மையெல்லாம் சேற்றில் கரைத்த புளிப்போலாகிறது, தாயோ பழிகாரி எனத்தூற்றி தாரமேகுலதெய்வம் எனப் போற்றும் குலமக்கள் எத்தனையோ பேரிருக்கிறார்கள். பெற்றவள் பிள்ளைக்குப்பழிகாரி பிள்ளை பெண்டாட்டிக்குப் பழிகாரன் பெண்டாட்டி தான் பெறும் பிள்ளைக்குப்பழிகாரி, இவ்வண்ணம் உலகத்தியல்புஇருப்பதை நோக்கச் சிசரோ சொல்லிய சொல், உறுதிப்பாடடைகிறதேயொழிய வேறில்லை. எவன் பெற்றவர் குறிப்பறிந்து நடக்கப்போகிறான் என்று யோசிக்கலாகிறது. "பொருளல்லாதவைப் பொருளாகச்செய்வது" புத்தியீனர் காரியம். வெகுபாடுபட்டுப்படித்து மேம்பாடடைய முயலும் நாங்கள் தக்கவாறு நடக்கச் சித்தமாயிருக்கிறோம். உங்கள் மருந்து முறையை வாசியுங்கள் என்று விரும்பிக்கேட்பீர்களாகில் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஏவாமக்கள், மூவாமருந்து என்பதுதான் யான் கண்ட மருந்துமுறை. ஏவாத மக்களைப் பெற்றவன் தனக்கு மூவாதமருந்தைப் பெற்றவனாகிறான் என்பது இதன்பொருள். இது என்ன விபரீதம் நரைக்கு மருந்து தருவதாகச்சொல்லி மூப்புக்கு மருந்தைக்காட்டுகிறீர்கள் இதை யாம் ஒப்போம் என்பீர்கள். இவ்வித ஆக்ஷேபணை ஏற்கனவே எதிர்பார்த்ததுதான். இக்காரணம் கொண்டே பின்னும் சுவடிகளைப்புரட்டினேன் தெய்வச்செய

லால் குறித்த வியாதிக்கு எடுத்த மருந்தொன்று அகப்பட்டது. ஆனால் முந்திக்கிடைத்த முறைச்சீட்டுப்போலே ஏக மூலிகையுடையதல்ல. உழைச்செல்வோரும் ஒருவரல்லர். பிந்தியமுறை சற்றுப்பெரிது. பலர்கைப்பாகம் வேண்டியதும் ஆகிறது என்றாலும் அதையுங்கேளுங்கள்.

"யாண்டுபலவாக நரையிலவாகுதல்
யாங்காகியர் எனவினவுதிராயின்
மாண்டவென் மனையும் மக்களுநிரம்பினர்
யான் கண்டனையரென்னிளைஞரும், வேந்தும்
அல்லது செய்யான்காக்குந்தன்றலை
ஆன்றவிந்தடங்கியகொள்கைச்
சான்றோர்பலர்யான் வாழுமூரே"

இது நரைக்கு மருந்து என்றே சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும்,

1. நற்குண நற்செய்கையுள்ள பிள்ளை பெண்டாட்டி ஒன்று
2. மனம் ஒத்த சேவகன் "
3. நீதிமானாகிய அரசன் "
4. கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்த ஊரார் "

ஆகிய நான்கு சேர்ந்த பண்டமாகிறது. இது கொஞ்சம் கஷ்டமான பக்குவமே. இருந்தாலும் குறைவில்லை. இந்நான்கு சரக்குக்கும் தாய்ச்சரக்கு முதற்சீட்டில் கண்ட மக்களே. ஏனைய மூன்றும் இதனாலாகக்கூடியனவே. யாம் எடுத்துக்கொண்டதும் இதிற்கண்டதுமான "நரை" முற்சீட்டிற்கண்ட மூப்பின் அறிகுறியே. முற்சீட்டுக்குப்பிற்சீட்டு விஸ்தாரமுறையேயன்றி வேறல்லவென்று உற்றுநோக்கும் ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்ளக்கூடியதொன்றாம். ஆதலால் கற்போர்க்கும், கேட்போர்க்கும், கையாள்வோர்க்கும் எளிதாயுள்ள முற்சீட்டைக் கைபழகினால், கழிந்தவர்போக இருந்து வருபவர் இவ்வியாதிக்கு இரையாகாது கடைத்தேற இயலும் என்னும் எமது குறிப்பை விரித்துச்சொன்னோம். பின்னும் விரிக்கில் வியாசம் பெருகுமாதலால் இம்மட்டோடு நிறுத்தினோம். சொன்ன சிறு குறிப்புகளைக்கொண்டு சொல்லாத பல குறிப்புகளையும் ஆய்ந்துகொள்வீர்களாக.

ஐ. சாமிநாதமுதலியார்.

41
MIYUR

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# மேலச்சிவபுரிச் சன்மார்க்கசபையும், குருபூசையும்.

இந்நிலவுலகத்திலேபெறலருமக்கள்யாக்கையைப்பெற்ற நாமெல்லோரும் அறிவின்மிக்க பெரியாரருளிய உண்மை நாற்பொருள்களை ஐயந்திரிபறியாமை நீங்கவுணர்ந்து அவ்வுணர்ச்சி வாயிலாக இது நிலைப்பொருள், இது நிலையில் பொருளென நன்கு பகுத்தறிதற்குரியேமாகின்றேம். அங்ஙனமாய பகுப்புணர்வால் இறுதியில் எல்லாம் அநித்தியமாகவொழிய சர்வ வியாபகராயுங் கருணையங்கடலாயும் விளங்குஞ் சிவபெருமான் திருவடிக்கணெய்தியனுபவிக்கும் பேரின்பமொன்றே நித்தியமாகவுள்ள தென்பதுபோதரும். அதுபோதரவே அவ்வின்பத்தைப்பெறுதற்கு விரும்பி அதற்குரிய செயலின் முயறற்கேயன்றி வேறொரு காரியஞ்செய்தற்குஞ் சிறிதும் அவகாசமின்றென்னுந் தெளிவுண்டாகும், என்னை: "மானிடப்பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம், ஆனிடத்தைந்துமாடுமரன்பணிக்காகவன்றோ" என்பது பெரியார் திருமொழியாகலின்.

இனி அவ்வின்பத்தைப் பெறுதற்குரிய உபாயந்தான் யாதெனின்; முன்னரே யவ்வின்பத்தைச் சிவபெருமானிடத்தரிய பத்தி செய்து, அப்பத்தி முதிர்ச்சியான் அப்பெருமானோடிரண்டறக்கலந்து எஞ்ஞான்றும் ஒரேபடித்தாக அநுபவித்துக்கொண்டிருக்கும் உண்மையடியாரிடத்துப்பத்திபூண்டொழுகுதலேயாம். இவ்வுண்மையுணர்ந்தன்றே நமது ஸ்ரீ தாயுமானசுவாமிகளும் "அன்பர்பணிசெய்யவென்னையாளாக்கிவிட்டுவிட்டா, லின்பநிலைதானேவந்தெய்தும் பராபரமே" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இங்ஙனமாய அடியார் பத்தியும் இருவகை நெறித்தாம். ஒன்று முன்னரே முத்தியெய்தினாரிடத்து அன்புசெய்து அவர் திருவுருவைத்தாபித்து வழிபடல், அவர் சரிதங்கூறல், அதனைக்கேட்டல், அவரைத்தியானித்தல் ஆகிய இவையெல்லாம் ஒருங்கு நிகழ்தற்குரிய

தாக அவர் திருநாளன்று செய்யப்படும் குருபூசையாம். மற்றொன்று அம்முத்திநிலை பெறுதற்குரியராய்த் தற்காலத்துத் திகழும் அடியாரிடத்து அன்புகூர்ந்து மனம், வாக்குக் காயங்களானியன்ற பணி செய்தலாம், இவ்விருவகை நெறியினாலுஞ் செய்யப்படும் பத்தியின் பயனெலாம், முன்னைய நெறியொன்றானே பெறத்தக்கனவேயாம். என்னை : அக்குருபூசை நாளன்று பழவடியாரிடத்துப் பத்திசெய்தலோடு ஆண்டுக் குழீஇய காட்சியடியாருவப்பனசெய்தலும் பெறப்படுதலானென்க.

இவற்றால் இறைவன் திருவடிக்கணெய்திப் பேரின்பந்துய்த்தற்குத்தக்க உபாயச்செயல் அச்சிவனடியார் திருநாளன்று செய்யப்படுங் குருபூசையேயாமென்பது நன்கு வெளியாயிற்று.

இவ்வரிய குருபூஜையை, புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த மேலைச்சிவபுரியென்னும் இந்நகரிலுள்ள சிவபத்தி நிறைந்த எம்நாட்டுக்கோட்டைத் தனவைசிய மணிகள் சிலர் நடத்திவரவேண்டுமென்னும் பேரவாவுடையராய்ச்சின்னாண் முயன்று "முயற்சிதிருவினையாக்கும்" என்றபடி அதன் பயனாக, அன்பினும் ஆண்டினும் பெரியராய ஸ்ரீ திருநாவுக்கரசுநாயனார் திருநாளாகிய ஸௌமியவருஷ சித்திரைமீ௳ நகவ அன்று அந்நாயனார் குருபூஜையைச்செய்து முடித்தார்கள். அன்று இவ்வூர்க்கணேசர் ஆலயத்தினொருபக்கத்தில் ஸ்ரீ திருநாவுக்கரசுநாயனார் திருவுருவப்படத்தை யெழுந்தருளச்செய்து கிரமப்படி பூஜைசெய்து, பெரியபுராணத்திலுள்ள வாகீசபுராணபடனஞ்செய்து அநேகம் அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் அளிக்கப்பட்டது.

பின்னர் அச்சுபதினத்தையே தொடங்குநாளாகக்கொண்டு "சன்மார்க்கசபை" யெனப்பெயரிய ஒருசபையுந்தாபிக்கப்பட்டது. அச்சபையின் நோக்கங்கள், சமயாசாரியர் திருநாட்களில் தக்கவித்துவான்களைக்கொண்டு கடவுள்பெருமை, அடியார் பெருமை, கல்வி, ஒழுக்கமுதலிய விடயங்களைப்பற்றிப் பிரசங்கம் புரிவித்தலும் பிறவுமாம்.

அன்று பகல் மூன்றுமணிக்கு உள்ளூரிலும் வெளியூர்களிலுமிருந்துவந்த வித்துவான்களும் பிரபுக்களுமாகிய பலரும் சகலவிக்கினநிவிர்த்தி கர்த்தாவாகிய ஸ்ரீகணேசர் திருக்கோயிலின் முன்னர்

உள்ள கொட்டகைக்கட்குழீஇயினார்கள். மூன்றரைமணிக்குச்சபை தொடங்கலாயிற்று.

முதலில் யாழ்ப்பாணத்தினின்றும்போந்த "உதயபாநு பத்திராதிபர் ஸ்ரீ சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் சபையார்க்குப்பிரதிநிதியாக எழுந்து இன்று இச்சபைக்கு தொல்காப்பிய விருத்தியுரையாசிரியரும், பற்பல அரிய நூலாசிரியரும் ஆகிய சோழவந்தானூர் ஸ்ரீ அரசஞ்சண்முகனாரவர்கள் அக்கிராசனாதிபதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வாத்தியகரகோஷங்களொலிக்க ஸ்ரீ அரசஞ்சண்முகனாரவர்கள் அக்கிராசனத்தமர்ந்தார்கள். பின்னர் மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் அக்கிராசனாதிபதியவர்களுக்குப் பூமாலை சாத்தி அடியிற்கண்டபடி வந்தனோபசார பத்திரமும் படித்தார்கள்.

### வந்தனோபசாரபத்திரம்.

பாடல்சால் செந்தமிழ்ப்பாண்டிநன்னாட்டிடைக், கூடலினொருசார் குலவியசோழவந்தானூர் மகாவித்துவான் ஸ்ரீ அரசஞ்சண்முகனாரவர்களுக்கு சுவாகத விஞ்ஞாபனம்.

அமிழ்தினுமினியசெந்தமிழ்மகடூஉநாதுதூ, ஆருயிரனையசீரிய ஐயா,

இக்காலத்தில் உரைநடைபடித்தும் உண்மையுணர்தற்கரிய செந்தமிழ்த்திகைமாகிய தொல்காப்பிய முதலிய பலநன்மணிகளின் இயற்கை யொளியின்னதென்று விளக்கி எம்மனோர்க்குத் தாங்கள் புரிந்த பெறற்கரும் பேருதவியை யாமெல்லாம் உள்ளுணர் வாலுணர்தலேயன்றிப் புறத்தேயெங்ஙனங்கூறுவேம்.

### அண்ணலே!

எவ்வெத்தத்துவ நுட்பங்களையும் குற்றமறவாராய்ந்து அவ்வாராய்ச்சியிற் கண்டவிடயம் ஒவ்வொன்றும் பெறலரு முழுமணியாயிருப்பவும், அவையிற்றைத் தம்பாலடைந்த எம்போன்றார்க்கு வரையாது கொடுக்கும்வள்ளன்மை தங்களிடத்தன்றி வேறியாரிடத்துப் பார்ப்பேம்? வள்ளால்! சிறுநூல்தானுஞ் செவ்விதிற் பயிலாது அவ்வளவினானே தம்மைப்பெரும் புலவராகக்கருதித்திரியும் பல்லோருங் கண்டு நாணி நன்னெறிக்கட் செல்லுமாறு செந்தமிழ்க்கடல் கடைந்

து அதனிற்றோன்றிய திப்பியவமிர்தத்தைத் திரட்டியுண்டும் உதவியும் தம்பால் அப்பைந்தமிழுணர்ந்தார் பாவனை சிறிது நிகழ்தலின்றி யொளிருந்தங்கள் பெருங்குணமாட்சியின் பெற்றிமை யெவ்வனம் பேசுவேம்? பெரும!

எல்லாம்வல்ல இறைவனாகிய சிவபெருமானிடத்து மிக்க பக்தி பூண்டு அவனுருவே தம்முருவா வவதரித்து வைதிக சைவசித்தாந்த நன்னெறியைச் செவ்விதின்விளக்கி ஏனைய புன்மதமொழித்து நம்மனோருய்யுமாறு தமிழ் வேதங்களை யருளிய ஆசாரியருளொருவராகிய அன்பேயுருவாயமைந்த ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் திருநாளாகிய இன்று அவ்வாசாரிய பக்தியின் பெருமையும் செந்தமிழுணர்ச்சியும் யாமெல்லா நன்குணருமாறு உபநியசித்தற்குரிய இவ் அறிஞர் அவைக்கண் தாங்கள் அக்கிராசனாதிபதியாக வமர்ந்து பெறலருமமிர்தமன்ன பிரசங்க மாரியைப் பொழிதற்கு முன்வந்த பெருமாட்சி எம் உள்ளத்தைக்கவர்ந்து உவகையங் கடலினுட் புகுத்தியது

இத்தகைய பேருதவிபுரிந்த தங்களுக்கு யாம்செய்யுங்கைமாறு; தங்களாயுள் அநேகமாயிரமாக வளர்வதாக, தாங்கள் இன்னும் அரும்பொருணிரம்பிய பெருநூற் பொருள்களையுள்ளவாறு விளக்கியொளிர்க, யாமெல்லாம் அவ்வுண்மையுணர்ந்து களிக்கக்கண்டு தங்கள் உள்ளம் இன்புறுவதாக. தங்களவதாரம் இந்நிலவுலகிற் கின்றியமையாத பெரும்பயனாதக. என்று வாழ்த்தி அவ்வாறே திருவருள் செய்யுமாறு முழுமுதற்பெருமானாகிய சிவபெருமான்சரணபங்கயங்களைச் சதா வந்தித்துச் சிந்தித்தலேயன்றி வேறென் புரிவேம்?

ஆசாரிய திருநாளாகிய இச்சுபதினத்திற் குழீஇய இவ் அறிஞர் அவைக்குத் தலைமணியாகவமர்ந்து அரியபெரிய விஷயங்களடங்கிய உபந்நியாசமாரியைப் பொழிந்து எங்களைக் கௌரவித்தற்கு முன்வந்த தங்களுக்கு யாங்கள் உள்ளன்போடு மிகவும் வந்தனஞ் செலுத்துகின்றேம்.

தங்கள் கல்யாண குணங்கணீடுவாழ்க என்பதே. (அதன்பின்)

$3\frac{3}{4}$ மணிமுதல் 4 வரை நெடுவைத் தமிழ்வித்துவான் ஸ்ரீமத் இராமசுவாமி ஐயங்காரவர்களால் இனிய ஓசையோடுக்கூடிய கடவு

ள்வாழ்த்தும், அக்கிராசனாதிபதியவர்களால் முன்னுரையாகச் சில விஷயங்களும் கூறப்பட்டன.

4 முதல் 5 வரை அக்கிராசனாதிபதியவர்கள் பத்தியென்னும் விஷயத்தைச் சபையார்மனம் உருக உபநியசித்தார்கள். பத்தியினிலக்கணம், அதுபெறும்வழி, அதனாலாம்பயன், அஃதில்வழிவருங்குற்றம் என்பத்தியை நான்குவகைப்படுத்தினார்கள். முதல்வகையாகிய இலக்கணங்கூறுங்கால் பத்தியென்பது முதலில் அன்பென்னும் பெயரினதாகிப் பின் அதுவே தம்மினும் தாழ்ந்தாரிடத்துக் கருணையாய் உயர்ந்தாரிடத்துப் பத்தியென்னும் பெயர்த்தாம் என்றும் விளக்கினார்கள். அன்பின் ஒற்றுமையால் ஈருயிர் ஒருடல்கொண்டதற்குச்சில கதாமேற்கோள்காட்டி ஓரறிவுயிர் முதற் பழகிய அவ்வன்பே மனித சரீரமெடுத்தற்குக் காரணமாகி அதில் வியக்தமாய்ப் பயன்படுமெனவும், அம்மனித சரீரமே அவ்வன்புக்குக் காரணமாய் அன்புபிறப்பட்டதெனவும் இருவகையாக்கோடல் திருவள்ளுவர் கம்பர்முதலிய பெரியார்களுக் கென்பதை "அன்போடியைந்த வழக்கென்ப வாருயிர்க், கென்போடியைந்த தொடர்பு" "என்பென்ப தியாக்கையென்ப துயிரென்ப விவற்றுக் கெல்லாம், பின்பென்ப வல்ல வேனுந் தம்முடை நிலையிற் பேரா, முன்பென்ப வுளவென்றாலு முழுவதுந் தெரிந்த வாற்றால், அன்பென்ப தொன்றின் றன்மை யமரருமறிந்த தன்றால்" என்பவற்றானுணரலா மெனவும் நன்குவிளக்கினார்கள் பின்னர் முறையே ஏனையவகைகளையும் யுத்தியநுபவங்காட்டி மேற்கோணிறுவி முடித்தார்கள்.

5-முதல் 5½ வரை உதயபாநு பத்திராதிபர் ஸ்ரீ சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் சமயகுரவரைப்பற்றிச் செவ்வையாக விளக்கி யுபந்நியசித்தார்கள்.

5½ முதல் 6 வரை நெடுவைத்தமிழ் வித்துவான் ஸ்ரீமத்—இராமசுவாமி ஐயங்காரவர்கள் " அடியார்பெருமை " யென்னும் விஷயத்தைப்பற்றித் தக்கமேற் கோள்காட்டிக் கேட்டார் மனந்தெளிவுண்டாம்படி யுபந்நியசித்தார்கள்.

6-முதல் 6½வரை ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் "ஈசுவர தரிசனம்" என்னும் விஷயத்தை யுபந்நியசிக்கத்தொடங்கி "உடம்பெனுமனை யகத்துவுள்ள மேதகளியாக, மடம்படுமுணர் நெய்யட்டியுயி

ரெனுர்கிரியயக்கி, யிடம்படு ஞானத்தீயாலெரியெழ விருந்து நோக்கிற், கடம்பமர்காளை தாதைகழலடிகாணலாமே" என்னுந் தேவாரத்தை முதலில் எடுத்துக்கொண்டு ஆங்காங்குப் பொருத்தமான வடநான் மேற்கோள்களுங்காட்டி யினிதுமுடித்தார்கள். $6\frac{1}{2}$ முதல் $7\frac{1}{4}$ வரை அக்கிராசனாதிபதியவர்கள் நம் அமிழ்தினுமினிய தமிழின் பெருமையைப்பற்றிச் சில கூறத்தொடங்கித் தமிழெழுத்துக்களுக்கு உயிர் மெய்யென்று ஆன்றோர்பெயர் வகுத்ததனுனும், வேறுபல விசேடங்களானும் இது ஞானபாடையாகுமென்றும், ஆரியவேதங்களானறியப்படாத இறைவன் இத்தமிழ்ப்பாடல்களைப் பெறவிரும்பி அப்புலவர்களுக்குப் புரிந்தவுதவி பலவாகுமென்றும் கேட்டார்ப்பிணிக் குந்தகைபவாய்க் கேளாரும் வேட்பமொழியுஞ் சொல்வன்மையால் விளக்கினார்கள். $7\frac{1}{4}$ முதல் $7\frac{1}{2}$ வரைவனைய உபந்யாசகர்களின் பிரசங்க விஷயத்தைப் பாராட்டிக் கூறியதோடு இச்சன்மார்க்கசபைக்கு நித்திய அக்கிராசனாதிபதி யொருவர் வேண்டுமென்றும், அதற்குத் தகுதியுள்ளவர் கல்வியுஞ் செல்வமுங் கவினப்பெற்றவரும் ஈகைக்குணம் வாய்ந்தவரும் நற்குணங்களுக்கோர் நிலயமுமாகிய ஸ்ரீமாந் வ. ப. மு. சா. பழனியப்பசெட்டியாரவர்களே யாவரென்றும், அவர்கள் சபைத்தலைவராக இருந்து சபையை நன்கு நடத்திவர வேண்டுமென்றும் பிரேரேபித்தார்கள். அஃது எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் அக்கிராசனாதிபதியவர்களின் உபந்யாச விஷயங்களிலுள்ள நுட்பங்களை யெடுத்து விளக்கிச் சபையாரை மகிழ்வித்தார்கள்.

வாழ்த்துப் பாக்களோடு சபை நிறைவேறியது.

அறிவு விருத்திக்கேதுவான இத்தகைய சபைகளை நாட்டுக்கோட்டைத் தனவைசியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்வாசத்தானங்களில் நடைபெறச்செய்து அதனாலிளையும் அகல்வானத் தும்பருறைவார் பதியினும் விழுமிதான இன்பந்துய்த்தாலன்றோ நமது செல்வம் பயனுடையதாகும்.

இக்கடிதத்தைப்பார்க்கும் நம் நண்பர்களெல்லாரும் கூடியவிரைவில் நம் செந்தமிழ்க்கல்வி, விருத்தியெய்தும் வண்ணம் முயல்வார்களென்று விரும்புகின்றோம். இங்ஙனம்.

காரிய நிருவாகர்,
சன்மார்க்கசபை,
மேலைச்சிவப்பட்டி.

# வித்தியாபாநுவும் அதனால் விளையும் நன்மைகளும்.

சேந்தமிழுணர்ந்த சீரிய நண்பர்காள்!

இந்நிலவுலகத்திலே உயிர்த்தொகுதிகள் முன்னரீட்டிய வினைப் பயனைத்துய்த்துப் பின்னரும் வினையீட்டாது தன்றிருவடி நிழலிலமர்ந்து எஞ்ஞான்றும் ஒரே படித்தாய அழிவிலின்பநுகர்ந்திருத்தற்கு இறைவன் தனக்கு இயல்பினமைந்த கருணைமிகுதியான் அவைகளுக்குக் கருவியாகத்தந்த பலவகைப்பட்ட சரீரங்களினுள்ளும் இம்மனித சரீரமே மிகவுமேம்பாடுடைத்து. என்னை இறைவன்றிருவுள்ளக்கிடக்கையை நிறைவேற்றுதற் குரிமையுடையதும், பற்பல பிறப்பினும் புரிந்த நல்வினை முதிர்ச்சியான் அடையத்தக்கதும் அஃதேயாகலின். இவற்றையுள்ளடக்கியன்றே நமதுவைதிகசைவசித்தாந்த பிரதிட்டாபகாசாரியருளொருவராகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் தாம் அருளிச்செய்த சிவஞான சித்தியார் என்னும் அருமைச் சைவசித்தாந்த நூலில்,

"அண்டசஞ்சுவேதசங்களுற்பிச்சஞ்சராயுசத்தோ
டெண்டருநாலெண்பத்துநான்குநூறுயிரத்தா
லுண்டுபல்யோனியெல்லாமொழித்துமானிடத்துதித்தல்
கண்டிடிற்கடலைக்கையானீந்தினன்காரியங்காண்."

என்று திருவாய் மலர்ந்தருளினர். இன்னும், "அரிதாம் பிறப்புளுயர் மானுடத்தி னடைவுற்றுவைகல்" என்று ஸ்ரீகச்சியப்பமுனிவரரும்,

"பரவைவெண்டிரைவடகடற்படுநுகத்துளையுட்
டிரைசெய்தென்கடலிட்டதோர்நோன்கழிசெவ்வி
யரசவத்துளையகவையிற்செறிந்தெனவரிதாற்
பெரியயோனிகள்பிழைத்திவண்மானுடம்பெறலே."

என்று நந்தாமணியனைய சிந்தாமணியாருங் கூறினர்.

இன்னும் மக்கள் யாக்கையின் மாட்சிமைகூறிய பெரியார் திருவாக்குக்களெண்ணிறந்தன. அவை யிற்றை யீண்டெழுதப்புகின் விரியுமாதலின் இவ்வளவோடுநிறுத்தி மேலெடுத்துக்கொண்ட விடயத்தைப் பற்றிப்பேசுவாம்.

இனி இத்துணையருமை பெருமை வாய்ந்த மனிதவுடலைப்பெற்ற நாம் அவ்வுடல் பெற்ற மாத்திரையானே மனிதராகிவிடமாட்டோம்; என்னை எப்பொருள் தன்இயற்கைத்தன்மையையுடையதாக இல்லையோ; அஃதப்பொருளாகாது; தான்கொண்ட வேறுபட்டதன்மை யெப்பொருளினதோ அப்பொருளேயாம். இறைவன் வழிபாட்டுநிமித்தம் நந்தனவனத்தில் நம்மாற் காலந்தோறும் நீர்வார்த்துப்போற்றி வளர்க்கப்பட்ட பூஞ்செடிகள் தக்கபருவத்தில் பூத்தருதலில்லையெனின், அவை பூஞ்செடிகளாகா; பயனின்றி வெறுநிலத்திற் படர்ந்த வேறுபல செடிகளேயாம். அதுபோல நாம் (மானுஷ்யம்) மனிதத்தன்மையுடையேமல்லேமாயின், மனிதராகேம்; எத்தன்மை நம்மிடமுள்ளதோ அத்தன்மையுடைய வேறு பொருளேயாவேம். இதனைக் கல்வியிற்பெரிய கம்பநாடர் கூறிய,

“ தக்கவின்ன தகாதனவின்னவென்
றொக்கவுன்னலராயினுயர்ந்துள
மக்களும்விலங்கேமனுவின்னெறி
புக்கவேலவ்விலங்கும்புத்தேளிரே. ”

என்னும் இராமாவதாரச் செய்யுளானறியலாம். அந்தோ! பலபிறப்பினும் உஞற்றிய போறத்தானெய்திய மக்கள் யாக்கைப்பெற்றும் மக்களாகேமெனின் அப்பிறப்பானெய்தும் பயனை யினி யெப்பொழுதுதான் பெறுவேம்! பெறலரும் அமிர்தத்தைப் பெற்றுந் துய்த்தலின்றெனின் அதனாற் பயனென்னை?

இனி அம்மனிதத்தன்மைதான் யாதெனின்; மறைமுதலிய வற்றிற் கூறிய விதிவிலக்கறிந்து ஒழுகுதலேயாம். பிறவுடல்களோடுங் கூடிய வுயிர்களிற் காணப்படாது மனிதர்க்குச் சிறப்பிலக்கணமாக வமைந்தது இஃதொன்றேயாம். ஏனைய உண்டி, உறக்கம், பெண்புணர்ச்சி முதலியனவெல்லாம் விலங்குகளுக்கும் நமக்கும் அமைந்த பொது விலக்கணங்களேயாம். இதனை, “ ஆஹாரநித்ராபயமைதுனஞ்சஸாமாந்யமே தத்பசுபிர்நராணும், தர்மோஹி தேஷாமதிகோவிசேஷ: தர்மேணஹீன: பசுபிஸ்ஸமாநா: ” என்னும் வடமொழிச் சுலோகத்தானறியலாம்.

இனி அவ்விதி விலக்குகளையறிதற்குக் கருவியாதெனின்; எல்லாம் வல்லமுழுமுதற்பெருமானாகிய இறைவனும், அவனுண்மையுணர்ந்து வழிபட்டு அந்தமிலின்பத்தழிவில்வீடெய்திய பெரியாரும் நம்மிடத்துள்ள பெருங்கருணை மேலீட்டாலருளிய மறைமுதலிய நூல்களேயாம். அந்நூலுணர்ச்சியானெய்தும் அறிவேநம்பிறப்பைப் பயன்படுத்துவதாம். அங்ஙனமாயின், அத்தகைய நூல்களையுணர்ந்து கோடற்குக்கருவியாதெனின்; நமக்கு இறைவனாற்றரப்பட்டு அநாதியே மூலமலத்தான் மறைப்புண்டு கிடக்கும் இயற்கையறிவேயாம். அவ்வறிவு இறைவன் ஆணையால் ஒருபொழுது மயக்க விருளின்று நீங்கிச்சிறிது வெளிப்படும், ஒருபொழுது மறைந்து அவ்விருளான் மூடப்படும் நிகழும். அவ்வியற்கைச்சிற்றறிவைக் கருவியாக்கொண்டு அறிவு நூல்களையாராய்ந்து, அதனால் மலவிருட்சத்தியைமுற்றும் ஒருவியிறைவனுண்மையுணர்ந்து அவனையடைதற்குரிய செயற்கையறிவைப்பெறுதல்வேண்டும். என்னை: "வயிரவூசியுமயன்வினையிரும்புஞ், செயிரறுபொன்னைச்செம்மைசெயாணியுந், தமக்கமைகருவியுந்தாமாம்" என்பவாகலின். ஆதியில் இறைவன் நமக்கீந்த இயற்கையறிவு, ஒருருக்குத்துண்டுபோலாகும். அத்துண்டை முன் அவ்வுருக்காற் கொல்லனிருமித்த கருவியைக்கொண்டு கருவிசெய்து, அதனாற்பயன் பெறுதல்போல, அவ்வறிவைமுன் அறிவுடையோரானிருமித்த நூல்களைக்கொண்டு நன்குவிளங்கச்செய்து, அதனாற் பயன் பெறல்வேண்டும். இங்ஙனங்கருவியிருந்துங்கல்லாது காலங்கழிப்போர், நில்லாதவற்றை நிலையினவென்றுணரும்புல்லறிவாளராதலின், அவரிடத்தில், எங்கும் நிறைந்தோனாயினும் இறைவன் வெளிப்பட்டான். இதனை,

> "நில்லாநிலையைநிலையாகநெஞ்சத்து
> நில்லாக்குரம்பைநிலையென்றுணர்வீர்கா
> ளெல்லாவுயிர்க்குமிறைவனேயாயினுங்
> கல்லார்நெஞ்சத்துக்காணவொண்ணதே"

என்னுந்திருமந்திரத்தானறிக. கல்வியானாய அறிவில்லாதார் பேசுதலில் வல்லராயினும், அவர்மொழியைக்கேட்டலினும், அவரைக்காண்டலினும் நல்லறிஞர் அருவருப்பர்; என்னை;

"கல்லாதானொட்பங்கழியநன்றாயினுங்,
கொள்ளாரறிவுடையார்"
"கல்லாதமூடரைக்காணவுமாகாது,
கல்லாதமூடர்சொற்கேட்கக்கடனன்று,
கல்லாதமூடர்க்குக்கல்லாதார்நல்லாராம்,
கல்லாதமூடர்கருத்தறியாரே"

என்பன தெள்ளத்தெளிந்த சீரியோர் திருவாக்காகலின், நல்லாசிரியரையடுத்து, அவர்க்குவேண்டுவன வுதவிக்கற்றவொருவன், ஆண்டான் மிகவிளையானாயினும், குலத்தாலிழிந்தானாயினும் அவனையே எல்லாரினும் உயர்ந்தோனாக அறிவுடையார் கொள்வர்.

"ஒருகுடிப்பிறந்தபல்லோருள்ளு
மூத்தோன்வருகவென்னாதவருள்
அறிவுடையோனாறரசுஞ்செல்லும்
வேற்றுமைதெரிந்தநாற்பாலுள்ளுங்
கீழ்ப்பாலொருவன்கற்பின்
மேற்பாலொருவனுமவன்கட்படுமே"
"திரியழற்காணிற்றொழுபவுலகின்
எரியழற்காணினிகழ்ப—வொருகுடியிற்
கல்லாதுமூத்தானைக்கைவிட்டுக்கற்றான்
இளமைபாராட்டுமுலகு"
என்பனவற்றானறியலாம்.

இங்ஙனம் ஆண்டானும் குலத்தானும் சிறியாரை அவற்றாற் பெரியாராக்குதலொன்றுகொலோ கல்வியின் பெருமை? இன்னும் அதுவே, தன்னைக் கற்றார்க்குக்கண்ணாய், உண்மைப் பொருளைத் தெரிவிப்பதாய், வருத்தத்திற்குதவியாய் இம்மையிற் புகழ்மகளைப்புணர்த்து, மறுமையின்பநுகர்வித்துப் பின்பு வீட்டுநெறியையும் அளிக்கவல்லதாம். இதனை

"கைப்பொருள்கொடுத்துங்கற்றல்கற்றபின்கண்ணுமாகு
மெய்ப்பொருள்விளக்குநெஞ்சின்மெலிவிற்கோர்துணையுமாகும்

பொய்ப்பொருள்பிறகள்பொன்னும்புகழுமாந்துணைவியாக்கும்
இப்பொருளெய்திநின்றீரிரங்குவதென்னையென்றான்."

"கற்பக்கழிமடமஃகுமடமஃகப்
புற்கந்தீர்ந்திவ்வுலகிற்கோளுணருங்கோளுணர்ந்தாற்
றத்துவமாயநெறிபடருமந்நெறி
யிப்பாலுலகத்திசைநிறீஇயப்பா
லுயர்ந்தவுலகம்புகும்."

என்பனவற்றானறியலாம். அக்கல்வியில்லாரே குருடர் என்பதை "அநேகஸம்ஸயோச்சேதிபரோக்ஷார்த்தஸ்யதர்சகம், ஸர்வஸ்யலோசனம் சாஸ்திரம் யஸ்யநாஸ்த்யந்தஏவஸ:" என்னும் வடமொழிச் சுலோகத்தானுமுணர்க.

இனி இவ்வளவுமாட்சிமை தரத்தக்க கல்விகளோ எண்ணிறந்தன. அவற்றைக்கற்கும் நாமோ சின்னாட்பன்னோய்ச் சிற்றறிவினேம்; எங்ஙனங்கற்பேமெனின்;

"கல்விகரையிலகற்பவர்நாள்சில
மெல்லநினைக்கிற்பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடையகற்பவேநீரொழியப்
பாலுண்குருகிற்றெரிந்து"

என்ற பெரியார் கூற்றைக்கடைப்பிடித்து, விரைவில் அறிவை விருத்திசெய்து நன்னெறியைப்பயக்கு நூல்களையாராய்ந்துகற்றல்வேண்டும்.

இனி யம்மெய்ந்நூல்களும்பல; அந்நூல்களின் உண்மைப்பொருளாராய்ச்சிசெய்த ஆசிரியர்மனோபாவங்களும்பல அவ்வாசிரியரிருக்குமிடங்களும் பலவாதலின்; அவ்வெல்லா ஆசிரியர் மனோபாவங்களையும் ஒருங்கேயுணர்ந்து, அவற்றுளுண்மையிது தானென்று நிச்சயித்தற்குத் தக்க கருவியொன்றிருப்பின், அஃது எல்லாரானும் அவசியம் அங்கீகரிக்கத் தக்கதேயாம். அது தான் யாதெனில்; இக்காலத்துப் பிரசுரிக்கப்படும் பத்திரிகையேயாம். அப்பத்திரிகையும் பலதிறப்படுமாயினும், அவற்றையடக்கி யிருவகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று தாற்காலிக வுலக நிலையுணர்த்தும் பத்திரிகை. மற்றொன்று இலக்கிய இலக்கண சாத்திரவுண்மை தெரிக்கும் பத்திரிகை.

இவ்விரண்டனையும் நாம்படிக்கவேண்டிய தவசியமாயினும், யாமுற்கூறிய, அறிவுநூற்பொருள்களை யுள்ளவாறுணர்தற்கு இன்றியமையாத கருவியிரண்டாவதேயாம். அதனிடத்தும் "ஆராய்ந்தமைவுடைய கற்பவே" என்னும் நீதிவசனத்தைக் கொள்ளவேண்டும். ஏனெனின்; இக்காலத்தில் பொருள்வருவாயொன்றையே பிரதானமாகக்கருதி யற்பநூலுணர்ச்சி யுடையாரும் பத்திராதிபராக வெளிப்படுதலானும், அன்னார் தம் முயற்சியைப் பத்திரிகை பெறுவாரைப் பெருக்கற்கேயன்றிப் பத்திரிகையினுள்ளுறையிற் பயன்படுத்தாமையானும் அமையுமென்க.

இனி அங்ஙனம் ஆராய்ந்து அமைவுடையன யாவையென்று நோக்குழி இத்தமிழ்நாட்டின் மாசிகங்களாகத் தோன்றிய சிலவேயாம். அவற்றுள் நமது "வித்தியாபாநு"வையும் ஒன்றாகக் கூறலாம். என்னை; தன்னை நடத்துதற்குத் தக்கவதிபரைப் பெற்றிருத்தலானும், இலக்கண இலக்கியங்களில் இலைமறைகாய்போற் கிடக்கும் அரியபெரிய விஷயங்களையும், சைவசித்தாந்தநுண் பொருள்களையும், மேனாட்டார் கண்டுபிடித்த நவீன தத்துவ சாத்திரக் கருத்துக்களையும், நல்லொழுக்க வகைகளையும், பிறவற்றையுந் தாங்கி விளங்கற்குத் தகுதியுடைமை யானுமென்பது, இவ்வளவு அரும் பெரும் விடயங்களைத் தாங்கி விளங்குமென்பது எதிர்காலநிகழ்ச்சியாகவும், இங்ஙனந் தெளிவுகூறற்கேது என்னையெனின்; இத்தகைய பத்திரிகை நடத்துந்தலைவர் பெரும்பாலும் நன்மாணாக்கர்க்கு நூல்கற்பிக்கும் ஆசிரியரிலக்கணங்களை யுடையராயிருத்தல் வேண்டும். அவ்விலக்கணங்களாவன: நற்குடிப்பிறப்பு, தூய்மை, ஒழுக்கம், கல்வி, வாய்மை, அழுக்காறின்மை, அவாவின்மை, நடுவுநிலைமை யென்பனவைகளேயாம். இவற்றை,

"அழுக்காறிலாமையாவாவின்மைதூய்மை
யொழுக்கங்குடிப்பிறப்புவாய்மை—யிழுக்காத,
நற்புலமையோடுநடுவுநிலைமையே,
கற்புடையவெட்டுறுப்புக்காண்"

என்பதனை யறியலாம். இவ்விலக்கணங்களெல்லாம் இப்பத்திராதிபரிடத்து அமைந்திருத்தலானும், இவர்கள் நூலாராய்ச்சியும், கற்பனாலங்காரங்கணிரம்பிய இனியவோசை கெழுமிய கவிபாடுந்திறமும் முன் இவர்கள் வெளிப்படுத்திய நூல்களானும், உரைகளானும் அறிந்துளேமாதலானும், சென்ற சில வருடங்களாக பல அரியவிடயங்களையுள்ளடக்கி நம்மனோர்க்கு மிக்க மகிழ்ச்சி தந்துவந்த "விவேகபாநு" என்னும் பத்திரிகைக்குத் தலைவராக இருந்தமையானும் இப்பொழுது தொடங்கிய வித்தியாபாநுவை முன்னையினும் பன்மடங்கு நன்னலம் வாய்ப்பநடத்துவாரென் னுந்துணிவேயாம்.

இனி யிப்பத்திரிகையின் பெயர் "வித்தியாபாநு" என்பதாம். வித்யா என்பது "வித" என்னுந் தாதுவினின்று முண்டாயசொல். 'வித, என்பதற்கு அறிதல் என்பது பொருளாதலின், வித்யா என்பது உண்மையறிதற்குக் கருவியென்னும் பொருளுடையதாகும். பாநு என்பது, சூரியனுக்கு, ஒளிசெய்கிறவன் என்னுங் காரணத்தாலுண்டாய பெயர். ஆகவே வித்தியையாகிய சூரியன் என்று விரித்தல் வேண்டும். வித்தையை வேறுபொருளாக வுருவகப்படுத்துதலினும் சூரியனைக்கொண்டது மிகவும் பொருத்தமுடையதே. என்னை; கதிரவன் உலகிருளொழித்து அலகிலா வுயிர்கள் தத்தந் தொழில்களைப்புரிந்து வாழ்தற்கு விளங்குதல்போல, வித்தையும் சீவர்கள் அகத்தேயுள்ள அஞ்ஞானவிருளையொழித்து இறைவன் உண்மைநிலையோர்ந்து பேரின்பமடைதற்குத் துணையாக விளங்குதலானென்பது. கண்களிருந்தும் உலகப்பொருள்களை யறிதற்குக் கதிரவ னுதவிவேண்டப்படுதல்போல அறிவிருந்தும் விதிவிலக்கு முதலியன தெரிதற்கு நூலுணர்ச்சி யின்றியமையாது வேண்டப்படுவதேயாம். இதனை,

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுங்காலன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல்யார்க்கும், பெருகியசெல் வமுமறிவும் பெற்றுநூ நூலுணர்ச்சி பெறுரேயாகிற், றிருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும் வீடுந் தெரியாவன்றே" என்பதனாலறிக.

இத்தகைய பத்திரவாராய்ச்சியானது நல்லறிஞர்க்குப்பலவான்றோர் மனநிலையுணர்ந்து மகிழ்தற்கும், நூல்கற்குமாணவர்களுக்கு

வசனவடிவமான நூன்முதலியன வெழுதுதற்கும், தாம் கற்குநூல்களில் ஆங்காங்கு நிகழும் ஐயம் ஒழித்தற்கும், நவீனவிஷயங்களைக் கண்டு களித்தற்கும் உதவியாக இருப்பதோடு, உயர்தரப் படிப்பில்லார்க்கும் கல்வியில் விருப்பமும், இன்னும்பல நன்மையும் புரியுமென்பதிற் சிறிதும் ஐயமின்று.

இக்காலத்தில், பத்திரிகை படித்தல் இல்லாதார்க்கும், அஃதுடையார்க்கும்ஞானபேதங்கள்பலவுள்ளன; அதுபடித்தலானுண்டாம் நன்மையை நாம் அனுபவத்தானுணர்ந்து வருகின்றேமாதலின், இன்னும் விரித்தன்மிகையே.

அறிவுடையன்பர்காள்,

இதுகாறுங் கூறியவற்றால், பல்பிறப்புள்ளும் மனிதப்பிறப்பே சிறந்ததென்பதூஉம், அது பெற்றார்க்குக் கல்வி யின்றியமையாததென்பதூஉம், அக்கல்விவகை பலவற்றுளும் நல்லறிஞராற்றெளிந்து கூறப்பட்ட அறிவு நூல்களே சிறந்தனவென்பதூஉம், அவையிற்றை நன்கு கற்ற பல அறிஞர் மனோபாவங்களை பொருமுகமாகவுணர்தற்குத் தக்க சாதனம் பத்திரிகையேயா மென்பதூஉம், அதன் வகையிரண்டனுள் சாத்திர சம்பந்தமானதே சிறந்ததென்பதூஉம் அங்ஙனம் சாத்திரசம்பந்தமானவை பலவற்றுள் இவ்வித்தியாபாநுவும் ஒன்றாயினும், அதனை நடத்தும் அதிபரான் அது மிகவும் சிறப்புடையதாம் என்பதூஉம், அதனால் விளையும்பயன் இன்னதென்பதூஉம் பிறவும் விளக்கப்பட்டன.

அருமை நண்பர்காள்,

இவ் 'வித்தியாபாநு,வை நீயிர்எல்லீரும் பெற்றுப்படித்து இன்புறுதலோடு பத்திராதிபர்க்குப் பத்திரிகை நடத்துதலில் மேன்மேலும் ஊக்கம் உண்டாம்படி செய்தலும் நம் கடமையேயாம்.

வித்தியாபாநு நீடுவாழ்க.

இங்ஙனம்.

தூய அறிஞர்பான்மேய அன்புள்ள,

சௌமியஞு மேடரவி 16உ

மு. கதிரேசச்செட்டி.
மகிபாலன்பட்டி.

# பொருண்மாட்சியும் கொடை மாட்சியும்.

இவ்வுலகத்திற் பற்றுடையவராய் வாழ்பவர் யாவரும் இடைரு முயற்சியோடு திரவியந்தேடவேண்டும். "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்றாரும் பெரியார். இம்மைச்சுகமென்று சொல்லப்படுவனவெல்லாம் யாண்டும் இலகுவிற் பெறலாம். உடலினைப்பேணுதற்குத்தக்க உணவும், உடையுத்தரீயங்களும், சுற்றமும், வெற்றியும், வித்தையும், ஏவலும், காவலும், அரசியலும், வரிசையும், குலமும், நலமும், கீர்த்தியும், நல்வார்த்தையும், நினைத் தகாரியம் அனைத்தும் பெறலாம். "என்சொலினுங் கைத்துடையான்காற்கீழொதுங்கும் கடன்ஞாலம்."

அளப்பரும் விஞ்சையேயன்றி மேன்மையும்
உளப்படுந் தன்மையு முயர்ந்த கீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவுங் கூட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே.—கந்தபுராணம்.

பூரியர் தமையேவுந் தாக்கும் புவிபுரப் பிக்குந் துய்க்குஞ்
சீரிய வுண்டி சேர்க்குந் தேவர்தம் முலகம் போக்குங்
காரிய மனைத்துங் கூட்டுங் கருதலர் தம்மை வாட்டும்
கூரியதிதன்மேலில்லைகொழும்பொனீர்கொண்மினென்றார்.—இராமாயணம்.

திரவியமுடையவர்களே எக்காலத்தும், எத்தேசத்திலும், பெலமுடையவராவர். ஒருவர் பிரபுத்துவமுடையராய் வருதற்குத் திரவியமே சிறந்த காரணம். திரவியமில்லாதவர்க்கு இம்மையிலே யாதொரு சுகமுமில்லை. நல்லுணவும், நல்லுடையும், சுற்றமும், நட்பும், குற்றேவலும், கீர்த்தியும், நல்வார்த்தையும், நன்கு மதிப்பும், புகழும், புண்ணியமும்இல்லை. இருமையும் அறியார்! பின்னை யாது தான் உண்டு.

திரவியமில்லாதவர்களுறவினர்கள்மத்தியிற்சேர்ந்துவாழுதலின்மிக்க
சிங்கமொடுபுலிபானைவெங்காடிவாசமேசெய்யுமொருகாட்டிலேகித்
தருநிறைகொள்விடபிஇமரவுரிக்கண்மீதுடைஇதக்ககனிகாய்களுண்டு
சாய்ந்திடும்புற்களேசயனமாமருவிடுந்தகுதிமிகநன்றதென்பர்.
—வதுளைப்பதிகம்.

இத்துணைப் பெருஞ்சிறப்புடைய திரவியந்தேடிக்கொள்ளுதல் இலகுவிலே முடிவதொன்றா! கஷ்டம்! கஷ்டம்! தேடுதல் மாத்திரமோ? தேடிய பொருளைக் காத்துக் கொள்ளுதலுங் கடுந்துன்பம்! காத்துக்கொண்டபொருளைப் பகுத்தலுந் துன்பம்! அப்பொருள் குறையினுந் துன்பம்! அழியினுந் துன்பம்! எப்படிப்பேணினும் நீரிலெழுதிய எழுத்துப்போல விரைந்தழியும் இப்பொருளோ பிறக்குங்காற் கொண்டு வந்ததுமன்று இறக்குங்காற் கொண்டுபோகப்படுவதுமன்று. நல்வினைப்பயனாலே இவ்வுடலைப்பேணும் பொருட்டும், நற்செயலிற் கொடுத்தற்பொருட்டும் இடைக்கண் நமக்குக் கிடைத்

௪௩. திரவியத்தாலாய பிரயோசனம் யாது? நல்வழியிலே நன்மனத்துடன் நல்லோர்பாற் கொடுத்தலேயாம்.

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைபிறந்துமண்மேல்
இறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா [த்தடிகள்.
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.—பட்டின

அறம், பொருள், இன்பம், அச்சம், விருப்பு, நாணம் என்னும் ஆறுங்காரணமாகவே கொடைக்குணம் தோன்றும் என்று தேவலர் என்னும் முனிவர் கூறினர். கைம்மாறு கருதாது அறமென்பதொன்றையே கருதிக்கொடுப்பது அறங்காரணமான கொடை என்றும், எதிர்ப்பொருள் கருதிக்கொடுப்பது பொருள்காரணமான கொடை என்றும், நாடகமாது, சிது, சூது முதலியன கருதிக்கொடுப்பது இன்பங்காரணமான கொடை என்றும், அதிகாரம், தீங்கு முதலியன கருதிக்கொடுப்பது அச்சங்காரணமான கொடை என்றும், ஒன்றன்பாற்கொண்ட உவப்புக்கருதிக்கொடுப்பது விருப்பங்காரணமான கொடை என்றும், சபையிலே நாணமுண்டாகும் என்றஞ்சிக்கொடுப்பது நாணங்காரணமான கொடை என்றும் அவரே விரித்தும் உரைத்தனர். இவற்றுள்ளே அறங்கருதிக்கொடுப்பதுவே பயன்றருவதாகும். மற்றெல்லாம் பயனுடையவல்ல.

ஆலயம், அக்கிரகாரம், ஆதுலர்சாலை, பிரபந்த நிர்மாணம் முதலிய செயலின்பொருட்டுத் திரவியங்கொடுத்தல் அறத்துடனே அரும்புகழையுங்கொடுக்கும். "தேடினர்யாவரேகொலெழுவகையானுஞ்சீர்த்தி, நீடினாவரேயென்பர்நீணிலத்துயர்ந்தமாந்தர்" என்று வரந்தருவாரும் கூறுவர். பண்டைக்காலத்து அரசர்களுள்ளே பலர் புலவர்பாடும் புகழுடையராய்வித்தியா விநோதர்களாய் வாழ்ந்தார்கள். அவர் புகழ் இன்றும் நின்று நிலவுகின்றது. பழைய நூல்களை அச்சிட்டுப் பரவச்செய்தலும், நல்லுபதேசங்களைப் போதிக்கும் பத்திரிகைகளை நடாத்துதலும், இக்காலத்துக்கு விருப்புடைய நாகரீகமாய் விளங்குகின்றன. அன்னோரன்ன நற்செயல்களுக்குப் பொருள் கொடுத்தலும் நன்றேயாம். ஈயாத மாக்தர் இருந்தென்ன போயென்ன!

யாவருந்திரவியந்தேடி எவ்வறமுஞ் செய்தற்குக்காரணமான தம்முடம்பு நிலைபெறுமாறு தாமும் உண்டு நல்விஷயத்திலே பிறர்க்குங்கொடுத்தல் வேண்டும். தாமும் உண்ணாது பிறர்க்குங்கொடாது பொருளைக்காத்துவைத்திருப்போர் செல்வர் என்று சொல்லப்படமாட்டார். தாமும் உண்டு பிறர்க்குங் கொடுப்பவரே செல்வராவர்.

ஈதலிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு—திருக்குறள்.

அ. குமாரசாமிப்பிள்ளை.

# நவபோதனை.

1. தகுந்தவயதுவந்து உலகவிவயகாரத்திற்பிரவேசிக்கிற ஒவ்வொருவாலிபனும்தன்னுடையகல்வித்திறத்திற்கும், புத்திக்கூர்மைக்கும்தேகசுபாவத்திற்கும் ஏற்றபடி தகுந்தவேலையைக் கைப்பற்றவேண்டும். அவ்விதஞ்செய்தாலொழிய அந்த வேலையானது தனக்கு யாதொருவிதமான பிரயோஜனத்தையும் உண்டாக்க மாட்டாது. இது விஷயமாய் சிறுவர்களின் பெற்றோர்களும போஷகர்களும் கவனியாமல் அலட்சியம் யாராட்டுவேது மகாபரிதாபமே. நாமெல்லோரும் உலகத்தில் கெட்டகாரியங்களைநீக்கி நல்லசெய்கைகளைச்செய்வதற்கென்று பிறந்தவர்களேயொழிய வேறில்லை. "அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்ததுகாட்டும் முகம்" என்றபடி ஒருவனுடைய முகவிலாசத்தைக்கொண்டே அவனுடைய சுபாவம் இன்னதென்று தெரிந்துகொண்டு அவன் இன்னவிதமான வேலைக்குத்தான் உதவுவானென்றும் தெரிந்துகொள்ளலாம். சிலர் சுபாவமாகவே கைத்தொழிலில் விசேஷஞானமுடையவர்களாகவும், மிகுந்த பிரியமுடையவர்களாகவுமிருக்கின்றார்கள். சிலருக்கு கைத்தொழிலென்றால் வெறுப்புண்டாகின்றது. கடவுள் ஆக்ஞைபின்படி யார்யாருக்கு எந்தெந்தவழியில் வேலைசெய்ய சுவாபிகமாகவே விசேஷ பிரியமிருக்கிறதாகத் தெரிகின்றதோ அப்பொழுதே அவரவர்கள் அந்தந்த வேலையை விர்த்திசெய்து வந்தாலொழிய வேறு எவ்விதவழியிலும் முன்னுக்குவரமுடியாது.

2. சம்பாதித்த ஒருவேலையை எப்படி நடத்துவது:—

தனக்கு அந்தவேலை இன்னதின்னதென்று தெரிந்துகொண்டபிறகு அதற்குத்தக்க இடம் இன்னதென்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் இடமல்லாத இடத்திற் செயயும்வேலை பிரகாசிக்கமாட்டாதென்பது நிச்சயம். இவன் ஆரம்பிக்கும் வேலையானது எந்தவிடத்திற் கூடியவரையில் அருமையாகவிருக்கின்றதோ அந்த இடத்தில் ஆரம்பிக்கவேண்டும். அது எப்படியென்றால், சகல சாமான்களும் நிறைந்து மிகவும் பிரக்கியாதி பெற்றிருக்கிற கடைகளின் பக்கத்தில் வேறொருநூதனமான கடையை ஸ்தாபிப்பதால் எப்படி அவ்வளவு லாபகரத்திற்கு ஏதுவில்லையோ அம்மாதிரியாகவேயிருக்கும். முதலிலேயே தகுந்த இடத்தில் ஸ்தாபித்துக்கொள்ளாமல் அடிக்கடி இடம்மாற்றிக்கொண்டேயிருந்தால் செய்ய ஆரம்பிக்கும் வேலையானது நிஷ்பிரயோஜனமாகவே முடியுமென்பதை இதைவாசிக்கும் ஒவ்வொருவரும் நன்றாயறிந்து கொள்ளக்கூடியதே. ஆகையால் தான் வேலைசெய்ய ஆரம்பிக்குமுன்னமேயே தக்க இடத்தை ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும்.

3. நாம் செய்யவேண்டிய காரியத்தை நம்மாற்கூடியவரையில் முயற்சிசெய்து பார்க்கவேண்டும்.

நமக்கு ஏற்பட்டிருக்கிற வேலையைச்சிறிது நேரமும் வீணாக்காமல் எப்பொழுதும் அதன்பேரிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து முடிக்கவேண்டும். இவ்விதமாக வேலைசெய்து அநேக புத்திமான்கள்மிகுந்த திரவியத்தைச் சம்பாதித்திருப்பதை நாம் கண்ணால்பார்த்திருக்கிறோம். அப்படி விடாமுயற்சியோடு வேலைசெய்யாமலும், தமக்கென்று ஏற்பட்டவேலையைச்சரிவரச்செய்யாமலும் கையிலிருந்த சிறிதுபொருளையும் இழந்துபரிதபிக்கிற அநேக மதியீனர்களையும் நாம் கண்ணாரக்கண்டிருக்கிறோம். ஒரு மனிதன் ஒருவேலையில் நன்மையடையவேண்டுமானால், விடாமுயற்சியும், ஊக்கமும், உண்மையும் இன்றியமையாதவைகளாயிருக்கின்றன. அநேகர்களுக்குச்செல்வமிருந்தும் பிரயோஜனமில்லை. தைரியமும், சுயேச்சையும், விடாமுயற்சியுமுடையவர்களுக்கு, திரவியம் பிரயோஜனமாகும். மற்றவர்களுக்கு அதனால் உபத்திரவமேதவிர அதனாலுண்டாகும் பலன் சிறிதேனுமில்லை.

4. அநேகம் வேலைக்காரர்களிருந்தாலும் ஒவ்வொரு வேலையையும் நாம்நேரில் பார்த்துமுடிக்கவேண்டும்:—

என்ன கைதேர்ந்தவேலைக்காரர்களாயிருந்தபோதிலும் சொந்தக்காரனுக்கு உள்ளகவலையுங்கருத்தும் அவர்களுக்கு ஒருபொழுதுமிருக்கமாட்டாதென்பது நிச்சயமே. ஒருமனிதன் நல்லமுதலாளியாகவிருக்கலாம். அவன் அநேகவேலைகளை ஒவ்வொன்றாய் நேரில் கவனிக்கக்கூடியதாயிருக்கும். ஒவ்வொருநாளும் புதிதுபுதிதாய் வேலைகளை கற்றுக்கொள்ளுகிறான். ஒவ்வொருதினமும் அநேகம் தப்பிதங்கள் நேரிடுகின்றன. இந்தத் தப்புகளெல்லாம் அவனுக்கு அனுபவத்திலே அனுகூலத்தைத்தரத்தக்கனவாயிருக்கின்றன. ஏனெனில் அவ்விதமான தப்பிதங்களினின்றும் இவன் அநேகவிஷயங்களைத்தெரிந்துகொண்டு நாளுக்குநாள் சீர்திருத்தமடையும்படியானமார்க்கமேற்பட்டுவிடுகின்றது. சோம்பேறியாகவும், கேவலம்தரித்திரனாகவுமிருப்பவனோடும் சேர்ந்து எவ்வேலையையும் தொடங்கக்கூடாது. ஒருமனிதன் எவ்வளவு பெருந்தன்மையுடையவனாக வெளிக்குக்காணப்பட்டாலும், அவன் ஆரம்பிக்கும் எந்தக்காரியமும் கைகூடிவருகிறதில்லை. ஏனெனில் அவனிடத்தில் நன்மையறியாமல் ஜனனகாலத்திலேயே அவனோடுகூடத்தோன்றியிருக்கும் குறைவுகளனேகமிருக்கலாம். ஆகையால் நம்மோடு சேர்க்கும் மனிதர்களைக் கூடியவரையில் பார்த்து மனத்திற்குத் திருப்தியுண்டானால் சேர்த்துக்கொண்டு ஒவ்வொருவேலையையும் ஆரம்பிக்கவேண்டும்.

5, வேலைக்குத்தக்க மனிதர்களை வைத்துக்கொள்ளவேண்டும்.

நமக்குள் வேலைக்கு வேண்டிய ஆஸாமிகளைப்பொறுக்கியெடுத்து நியமிக்கவேண்டும். நாம் ஏற்படுத்தியிருக்கும் வேலைக்கு உகந்த மாதிரியான மனிதர்கள்கிடைப்பது மிகவும் துர்லபம். தக்க வேலைக்காரன் அகப்படுவானேயானால் அவனை நீக்கிவிடாமல் நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும். மிகுந்த அனுபவமுள்ள மனிதர்களால் நமக்கு மிகுதியும் லாபமுண்டு. அடிக்கடி ஆஸாமிகளை விலக்கிவிட்டு புதிதுபுதிதாய் நியமித்துக்கொண்டேயிருப்போமானால் நம்வேலையும் சரிவர நடவா. நல்லபெயர் வாங்கவும்முடியாது. தகுந்த லாபமும் கிடைக்கமாட்டாது. அதனால் சிலசமயங்களில் நஷ்டம்வந்துநேரிட்டாலும் நேரிடும். ஆகையால் நாம் வேலைக்காரர்களை நியமிப்பதற்கு முந்தியே தீர்க்காலோசனைசெய்து தகுந்தமனிதர்களாக ஏற்படுத்தி அவர்களையடிக்கடி மாற்றாமல் நிரந்தரமாய் வைத்துக்கொள்ளும்படியான மார்க்கத்தைத்தேடுவது மிகவும் அவசியம்.

6. நம்வேலைக்கு மிஞ்சிப்போகக்கூடாது. அதாவது நாம் எடுத்தவேலையெதுவோ அதை முன்னுக்குக்கொண்டுவருமாதிரியில் மிகவும் விடாமுயற்சியுடன் என்னகஷ்டம் வந்தபோதிலும் அதன்பேரிலேயே கவனமாய் வேலைசெய்யவேண்டும். ஒரு வேலையை ஆரம்பித்து அதுசிறிது முடிந்ததும் முடியாததுமாயிருக்கும்பொழுது அதைவிட்டுவிட்டு வேறொருவேலையை ஆரம்பிப்பது மிகவும் கெடுதலான காரியமாகும்.

7. ஒருபொழுதும் கடன்படலாகாது. எந்தச்சமயத்திலும் கடன் வாங்குவதே பிசகு. கடன் வாங்குவதைப்போல ஒருமனிதனை மதிப்பில் தாழ்த்துவது வேறொன்றுமில்லை. கடன்படுவதால் அடிமையாகவேண்டும். இதை ஒவ்வொருவரும் நன்றாய்த்தெரிந்திருந்தும், இருபதுவயதுகூட ஆகாத அநேகம் அதிபால்யர்கள் அளவுக்குமிஞ்சிக்கடன்பட்டு அவஸ்தைப்படுவதை நாம் கண்ணால் பார்க்கிறோம். கடன் என்பது ஒரு மனிதனுடைய கௌரவத்தையழிக்கிற ஓர் கருவியாகயிருக்கிறதுமல்லாமல் தன்னைத்தானே வெறுத்துக்கொள்ளும்படியாகவும் செய்கின்றது. நெற்றிவேர்வைநிலத்தில் விழும்படி வேலைசெய்து சம்பாதிக்கும் ஐவேஜிதனக்கும் தன் குடும்பத்தாருக்கும் அரைவயிற்றுக்கஞ்சிக்கும்போதாமல் கடனையிறுக்கச்சக்தியற்றவர்களாக அவஸ்தைப்படுகிறார்கள். கடன்பேரில்கொள்விலை விற்பனைசெய்கிறவர்களைப்பற்றியும் கடனுக்குவாங்கி லாபத்திற்குவிற்கிற வியாபாரிகளைப்பற்றியும் நாம் இங்கு சொல்லவந்தோமில்லை. பணம்என்பது நெருப்புக்குச்சமானமாகவிருக்கின்றது. அவ்விதமாக, நெருப்புடன் பழகினால் அதுஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் நமக்கு உபத்திரவத்தை விளைவிக்கக்கூடியதே. அம்மாதிரியாகவே கடனானது நம்மை எப்படியும் மோசஞ்செய்துவிடுமென்பது நிச்சயம். ஆகையால் நாம் கூடியவரையில் கடன்வாங்காமல் ஜாக்கிரதை

யாயிருக்கும்படியான வழியைத்தேடவேண்டும். அப்படி ஜாக்கிருதையாயிருந்தால் கூடியவரையில் கஷ்டப்படாமலும் கௌரதையாகவும் ஆயுள்பரியந்தம் காலங்கழித்துவரலாம்.

8. சம்பாதித்தபணத்தைச் செலவழிக்கும்வகை எப்படியெனில், நாம் தான் விசேஷதிரவியத்தைச்சம்பாதித்துவிட்டோமே இனிநாம் அதைஎப்படிச்செலவழித்தால்தான் என்னவென்று கண்டகண்டபடி வீண்விஷயங்களில் வியர்த்தமாய் திரவியத்தை விரயம் செய்யலாகாது. நாம் திரவியத்தை அலட்சியஞ்செய்து வாரியிறைத்தால் அதுவும் நம்மை லட்சியம்செய்யாமல் நம்மை வெறுங்கையனாக்கி விட்டு விலகிப்போய்விடும்.

இந்தக்காரணத்தைக்கொண்டுதான் திரவியத்திற்குச்செல்வம் (செல்வோம்) என்று பெயர். ஒவ்வொரு விஷயத்திலும் நிதானித்து அளவுக்கு மிஞ்சாமலும், வருவாய்க்கு மேற்படாமலும் சிராய்ச்செலவுசெய்யவேண்டும். ஆகையால் சிறிதுபொருள் கையிற் கிடைத்தவுடன் தன்னைத்தானே மறந்து தன்னுடைய பூர்வஸ்திதியைச் சிறிதும் நினையாமல் வீண்செலவு செய்யாமல் பொருளைக்காப்பாற்றவேண்டும்.

9. பத்திரிகைகளை வாசிப்பதால் உண்டாகும் பயன்கள் என்னவென்றால் நமக்கு உலகத்தில் அங்கங்கே நடக்கிற சமாசாரங்களெல்லாம் நன்றாய்த்தெரியும். அவைகளைப்படிக்காததினால் நாம் ஒரு சமாசாரமும் தெரிந்துகொள்ளாமல் குருடர்களுக்கும் செவிடர்களுக்கும் சமானஸ்தர்களாகிறோம். பத்திரிகைகளைவாங்கி வாசிக்கிறவன் எவ்வளவு புத்தியீனனாயிருந்தாலும் நல்லபுத்தியுடையவனாக சிறிதுநாளில் மாறிவிடுகிறான். எவ்வளவு முரட்டுக்குண முடையவனானாலும் நல்லசாத்துவீக சிரோமணியாக மாறிவிடுகிறானென்பது ஒவ்வொருவருக்கும் தெறிந்தவிஷயமே. அவைகளை வாங்கி வாசிப்பதனால் கல்வியிலும் நாளுக்குநாள் தேர்ச்சியடைகின்றான். ஆகையால் அருமையான விஷயங்களை தன் அங்கத்தில் ஏந்தி மாதமொருமுறை உலாவிவரும் நம் அருமை வித்தியாபாநு பத்திரிகையை எந்நாளும் ஆதரித்துவர நண்பர்களை விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

V. S. கிருஷ்ணசாமி அய்யர்,

# விநோத விஷயங்கள்.

மரியாதை:—பெரியோர்கள் நம்வீட்டுக்குவந்தால், சீக்கிரம்எழுந்து எதிர்கொண்டு அழைத்துவந்து ஆசனத்தில் இருத்தி வழிபாடு செய்து உபசரிப்பதும், அவர்கள் இருக்கச்சொல்லுமுன் அவர்கள் எதிரே உட்காராமலும் இருப்பது வழக்கம். ஆனால், இந்து-சீன தீபகற்பத்தில் உள்ள மலேயா பினங் முதலிய தேசங்களில் வசிக்கும் ஒரு ஜாதியார் தங்களுக்கு மேற்பட்டவர்களோடு சம்பாஷிக்கும்போது மரியாதைக்கு அடையாளமாக உட்கார்ந்துகொண்டுவிடுவார்கள். மத்திய ஆபிரிகாவில் உள்ளோர் பெரியோர்முகத்தைப்பார்த்து நேர்நின்றுபேசுதல் அவமரியாதையென் றெண்ணுகின்றனர். அவர்களுக்குள் பெரியோர்க்கு முதுகுகாட்டிநின்றே பேசுவது மரியாதையாம். நிற்க,

எஸ்கிமோ ஜாதியாருக்குள் ஒருவருடைய மூக்கை ஒருவர் பிடித்திழுப்பதே பரஸ்பரம்செய்துகொள்ளும் வந்தனமாம்.

நகம் வளர்த்தல்:—சீனாவிலும் அதற் கருகாண்மையிலுள்ள அரசாங்கங்களிலும் உள்ளவர்களுக்குள் ஓர் நூதனவழக்கம் வெகுகாலமாகப் பரவிவருகிறது. அங்குள்ளோர் எவ்வளவுக்கெவ்வளவு நீளமாகத் தங்கள் நகங்களை வளர்த்துவருகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு மேன்மக்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களில் ஆடவரினும் பெண்டிரே விசேஷமாக நகம் வளர்ப்பவர்கள். இப்பெண்டிர்கள் தங்கள் நகங்கள் முறிந்துவிடாதபடி வெள்ளியினால் கூடுசெய்து அவைகளை மூடிக்காத்து இயன்றவரை நீளவளர்த்து வருகின்றனர்.

கடற்பசு:—இவ்வுலகத்திற்காணும் எல்லாப் பொருள்களையும் பிராணிகளையும் "தலசம்" (நிலத்திற் பிறப்பது) என்றும் சலசம் (நீரிற் பிறப்பது) என்றும் இருவகைப்படுத்தலாம். ஒரே பிராணி அல்லது வஸ்து வெவ்வேறு உருவவழக்கங்களுடன் நீரிலும் நிலத்திலும் வசிக்கக்கண்டும் கேட்டுமிருக்கிறோம். உதாரணமாக:--நிலத்தில் குதிரை, யானை, முத்து, பவளம், நாய், சிங்கம் முதலியன இருப்பது

போல் நீர்க்குதிரை, நீர்யானை, முத்து, பவளம், நீர்நாய், கடற்சிங்கம் முதலியன இருக்கின்றன. பசு என்பது நிலத்தில் இருப்பதாகமட்டும் அநேகர் கேள்விப்பட்டிருப்பரேயன்றி "கடற்பசு" என்று ஒன்றுள்ளதென்பது சிலர்க்கே தெரியும். இப்பசு யாதெனில் "மனுத்தி" என்னும் ஒருவகை பிரமாண்ட ஜலசரமே. "டுகோங்" என்றும் இதனை ஒரு சாரார்சொல்வர். வாழும் பிராணிகளிற் பெரும்பான்மைய மாமிசபட்சணிகளாயிருக்க இப்பசுமட்டும் சாகபட்சணியாகப் புற்பூண்டுகளைத்தின்று பிழைக்கின்றது. இப்பசு ஓர்வகைத் திமிங்கலம். இதற்குப் பசுவின் கால்கள் போன்ற கால்கள் இல்லை. ஆயினும் இதற்குத்தலையும் காதுகளும் பசுவின்தலைகால்களைப்போலவே இருக்கின்றன. அன்றியும் இது ஜலசரங்களைப்போல் முட்டையிடாமல் பசுவைப்போலவே கன்றுபோட்டுப் பால்கொடுக்கும். அதன் பால் மடி காதுக்கருகில் இருக்கின்றது. அதன்மாமிசம் அதிருசிகரமானதென ஐரோப்பியர்கண்டு அதனை வேட்டையாடி நிர்மூலமாக்கி வருகின்றனர்.

**அரபிய ஸ்திரீகளின் புனர்விவாகம்:**—தனது நாயகனை இழந்த அரபிய ஸ்திரீ தான் புனர்விவாகம் புரிகிறதாயிருக்குமாயின் கல்யாண தினத்திற்கு முதல்நாள் இராத்திரி தன் முந்திய கணவனுடைய கல்லறைக்குச் சென்று அங்கு மண்டியிட்டுக்கார்ந்து "பரிசுத்தமுள்ள என் பர்த்தாவே! என் இரண்டாம் விவாகத்தைக்குறித்து நீர் விசனமும் வைராக்கியமும் அடையாதிருக்கும்படி உம்மை மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று ஜபிப்பாளாம். ஆனாலும் அவன் விசனப்படவேதான் செய்வான் என்றுபயந்து இரண்டு தோல் துருத்தி நிரம்ப நீர்சேந்திச்சென்று அவனுடைய கோபம் தணியுமாறு அத்தண்ணீரைக் கல்லறையில் தெளிப்பாளாம். இதனால்அவன்கோபம் ஆறிவிடுமென்பது அவளுடைய எண்ணமும் நம்பிக்கையும். பிற்பாடு வீட்டுக்குத் திரும்பி மறுமணம் முடித்துத் தன் புதிய கணவனுடன் நிர்விசாரமாய் வாழ்வள்.

**நிற அடையாளம்:**—நமக்கு வெண்மை கீர்த்திக்கும் பரிசுத்தத்திற்கும் கறுப்பு துக்கத்திற்கும் அடையாளம்.சீனர்க்கோ வெண்ணிறமே துக்கத்திற்கும் கருநிறம் சந்தோஷத்திற்கும் அடையாளமாம்.

யானையின் வயது:—யானைகள் 400 வருஷம் பிழைத்திருக்குமென்று நம்மவர்கள் சொல்வது உண்மையென்பதற்குப் பின்வரும் விஷயமேசான்று:— கி. மு. 327ல் இந்தியாவில் அரசாண்ட புரூரவன் என்பவனுடன் மகா அலெக்சாந்தர் போராடி அவனை வெற்றிகொண்டகாலத்தில், அவன் (அலெக்சாந்தர்) புரூரவனு ... ய சைநியத்தில் இருந்து வீரதீரத்துடன் சண்டைசெய்த ஓர் ... யானையைப்பிடித்து அதன்மேல் ஓர் வாசகம் ஒட்டி அதை ... இவ்வியானை 354 வருஷங்களுக்குப்பின் காணப்பட...

இராட்சச விருக்ஷங்கள்:— காலிபோர்னியா ... (Mammoth) என்ற ஒருவகை அதிபிரமாண்ட வி... றது. இவ்வகையில் அநேக மரங்களின் வயது 3000 ... ன்னக் கணக்கிடப்பட்டிருக்கிறது. சுமார் 150 வருஷங் ... தரையில் விழுந்துகிடக்கும் ஓர் மரத்தின் குறுக்களவு 4... யிருக்கிறதாம். அதன் சுற்றளவு 125 அடியாம். அ... 400 அடி. அதன் பட்டை 4அடி கனமுள்ளதாயிருக்...

தெ. சி. சுப்பிரமணியஐய...

---

## சமாசாரக்கொத்து.

லார்ட்ஸ் சபை:— லார்ட்ஸ் சபையில் லார்டு ராபர்ட்ஸிற்குப் பதிலாக லார்டு நியூடன் நாஷனல் சர்விஸ் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார். இப்போது மசோதா முதல்தடவை வாசிக்கப்பட்டிருக்கிறது.

பெர்ஷியாவின் நிலைமை:—காமன்ஸ் சபையில் மிஸ்டர் டிலான் கேட்ட கேள்விக்கு மறுமொழியாக டாபிரிஜிற்குச் சமீபமாயுள்ள ருஷியசைநியம் 4000-பேர்வரை அடங்கியிருக்குமென சர் எட்வார்டு கிரே சொன்னார்.

ஒரு பூகம்பம்:—நேற்று வியாழக்கிழமை இரவு 7-15 மணிக்கு வங்காளநாட்டிலே கிழ்இந்தியா இருப்புப்பாதையிலுள்ள கிடாரில் பலத்த பூகம்பம் ஒன்று உண்டானதாகவும் அது ஒரு நிமிஷத்துக்குக் குறைந்தே நிலைத்திருந்ததாகவும் தெரிகிறது.

மகாமகோபாத்தியாய
... வே. சாமிநாதையர்

விஜயநகரம் மகாராணியாரின் நன்கொடை:—விஜயநகரம் மகாராணி சிவில் ஆர்பன் அஸைலம்ஸ் (Civil Orphan Asylums) என்ற அநாதைச் சிறுவர்கள் சிறுமிகள் இவர்களின் பள்ளிக்கூடங்களுக்கு ரூ 1,000 நன்கொடை கொடுத்திருக்கிறார்கள்.

இந்திய [illegible] ருத்தங்கள்:— இந்தியத் திருத்தங்கள் சம்பந்தமாய் மாகா[illegible] சபைகளுக்கு ஏற்படவேண்டிய விதிகள் மாகாண [illegible]ளால் தயார்செய்யப்படுகின்றன. அவைகளைப்பற் [illegible]ன்மெண்டார் அடுத்தமாதம் ஆலோசனை செய்வார்

[illegible]விலும் பாகல்பூரிலும் புரூலியாவிலும் பூகம்பம்:— [illegible] தினங்களுக்குமுன்னே கல்கத்தா, பாகல்பூர், புரூலியா [illegible]லுங்கூட பூகம்பம் உண்டானதாய்த் தெரிகிறது.

[illegible]பட்டி ஸ்ரீமாந் தீர்த்தபதியவர்கள்:—திருநெல்வேலி ஜில் [illegible]ட்டி ஜமீன்தார் அவர்கள் உதகமண்டலத்துக்குப் போயி [illegible]றும், அங்கே அவர் கவர்னர் ஸர் ஆத்தர்லாலியை இந்த [illegible] தேதியன்றும், மைசூர் மகாராஜாவை 16ந்தேதியன்றும் [illegible]ஜாவை 17ந்தேதியன்றும் பார்த்தாரென்றும் இந்தமா 18ந்தேதியன்று அவ்வூரைவிட்டு சிங்கம்பட்டிக்குப் புறப்பட் போனாரென்றும் அறிகிறோம்.

இந்தியாவில் உணவுப்பொருளின் விலையேற்றம்:—இந்தியாவில் நாணயம் வழங்கிவருகிற முறைமையாலும், அளவிற்கு அதிகமாகப் போடப்படுகிற ரூபாயாலும், இந்திய உணவுப்பொருள் விலை அதிகமாகிறதென மிஸ்டர் ஹார்ட்ஸ்டேவிஸ் கேட்ட சில கேள்விகளுக்கு லார்டு மார்லி இதுவிஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாருடன்பேசி வருகிறாரென்றும், ஆனால் அவர் என்ன முடிவு செய்வாரென இப்போது சொல்லமுடியாதென்றும் மிஸ்டர் ஹாப் ஹவுஸ் பதில் அளித்தார்.

ஒருவூர் விலாசத்துக்குவந்த தந்தியை வேறொரு ஊருக்குத் திருப்புதல்:—தந்தி இலாகாவில் இதுவரை ஒருவூர் விலாசத்துக்கு வந்த தந்தியை, அதனைப் பெற்றுக்கொள்ளவேண்டியவர் அவ்வூரில்